விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 225 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 15 புதன்கிழமை (31.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## அபிவிருத்தித் திட்டங்களுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை

### பெஃப்ரல் அமைப்பு அறிக்கை

PAFFREL


(கொழும்பு)

நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி மற்றும் நிவாரண வேலைத்திட்டங்களுக்கு தாம் எந்த வகையிலும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என பெஃப்ரல் அமைப்பு அறிக்கையொன்றினூடாக அறிவித்துள்ளது.

குறித்த திட்டங்களைத் தடுக்கும் வகையில் பெஃப்ரல் அமைப்பு செயற்படுவதாக சில தரப்பினர் கருத்து வெளியிட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. 15

## நல்லூர்க் கந்தன் ஆலய காளாஞ்சி கையளிப்பு நிகழ்வு





03

## தேர்தல் தடைப்படாமல்
# இடமாற்றங்களுக்கு ஆட்சேபனை இல்லை
## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளில் தலையிடாத வகையில் 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறையை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இதன்படி, வருடாந்த இடமாற்ற அறிவிப்பு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி நேற்று முன்தினம் அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிராந்திய செயலாளர்களுக்கு இது தொடர்பான 15

## கற்கள், தடிகளால் தாக்கி ஒருவர் கொலை
### கொழும்பு நீதிமன்றால் நால்வருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

கற்கள் மற்றும் தடிகளால் தாக்கி நபர் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் நான்கு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யபட்டபெந்திகேவினால் இந்த 15

## 23 இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் 23 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 64 மீனவர்களின் வழக்கு 15

### இன்று கனடா செல்லவிருந்த நிலையில்
## வவுனிக்குளத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

(முறிகண்டி)



இன்று கனடா செல்லவிருந்த நிலையில் முல்லைத்தீவு பாண்டியன்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வவுனிக்குளத்திலிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் முல்லைத்தீவு யோக 15

### பொலிஸ்மா அதிபர் விவகாரம்
## ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்ப தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டில் பொலிஸ்மா அதிபரின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணுமாறு ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்ப தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பொலிஸ்மா அதிபராக செயற்பட தேசபந்து தென்னக்கோனுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

அதன்படி தேசபந்து தென்னக்கோனுக்கு பொலிஸ்மா அதிபராக செயற்படல், அதிகாரங்களை 15

## அராலியில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அராலி மேற்குப் பகுதியில் முதியவர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவரும் அவரது மனைவியும் சம்பவம் நிகழ்ந்த வீட்டில் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில், 15

## கொழும்பிலிருந்து வவுனியா பயணித்த பேருந்து மோதி விபத்து
### தலை துண்டிக்கப்பட்டு பெண் பலி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த சொகுசு பேருந்துடன் உந்துருளி மோதி விபத்திற்குள்ளானதில் பெண்ணொருவர் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இராஜாங்கனைப் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண்ணே இவ்வாறு விபத்தில் உயிரிழந்ததாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நொச்சியாகம பொலிஸார் தெரி 15

### தமிழரசுக் கட்சியின் வழக்கு
## ஒக்ரோபர் 14 விளக்கத்துக்கு முன்னரான கலந்தாய்வு

(திருகோணமலை)

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கு எதிரான வழக்கில் "விளக்கத்துக்கு முன்னரான கலந்தாய்வு" எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே விளக்கத்துக்கு முன்னரான கலந்தாய்வுக் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையின் சித்த மருத்துவ பீடம் தனிப் பீடமாக தரமுயர்த்தப்பட்டது

## வர்த்தமானி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவபீடம் தனிப்பீடமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபித்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் மத்தியில் சுதேச மருத்துவம் தொடர்பான நல்லபிப்பிராயம் காணப்படுவதுடன், மாணவர்கள் மத்தியிலும் சுதேச மருத்துவத்தினை தெரிவு செய்வதில் அண்மைக் காலத்தில் ஆர்வம் அதிகரித்து வருவதனையும் சுட்டிக்காட்டினார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்து அமைச்சரவையில் ஏற்றுக்,கொள்ளப்பட்டதனால், தொடர் நடவடிக்கைகளை முன்னெடுத்த கல்வி அமைச்சு, ஏற்கனவே கிழக்கு பல்கலைகழகத்தில் சித்த மருத்துவ பீடத்தினை ஆரம்பித்திருந்த நிலையில், தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வந்த சித்த மருத்துவ அலகினையும் தனியான பீடமாக தரமுயர்த்தும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

# கரணவாயில் சுற்றிவளைப்பு 12 பேர் பொலிஸாரால் கைது

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரணவாய்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட யுத்திய நடவடிக்கையில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இடம் பெற்றுவரும் யுத்திய நடவடிக்கையின் ஒரு கட்டமாக நெல்லியடி பொலிஸ் பிரிவ்ற்கு உட்பட்ட கரணவாய்ப் பகுதியில் நேற்று செவ்வாய்க் கிழமை (30) காலை மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதில் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 பேரும், கசிப்பினை உடைமையில் வைத்திருந்த இருவருமாக 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)

# மகிந்த - தம்பிக்க பெரேரா நேற்று விசேட சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (30) இடம்பெற்றுள்ளது.

விஜேராம பகுதியில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் இதுவரையில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

எனினும் நேற்றையதினம் குறித்த சந்திப்பு இடம் பெற்றதாக பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா உறுதிப்படுத்தினார்.

அதேநேரம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார். (ம-7)

# நீதிமன்றுக்கு எதிராக குழப்பம் விளைவித்தால் நாடு பாரிய சேதத்துக்குள் அகப்படும்

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு

உயர்நீதிமன்றத்தின் இறுதித்தீர்ப்பு அறிவிக்கப்படும் வரையான இடைக்காலத்துக்கு பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பதற்கு அரசியலமைப்பில் இடமளிக்கப்பட்டிருப்பதுடன், பொலிஸ் சேவையில் ஈடுபடும் பெரும் எண்ணிக்கையானோரில் அதற்குப் பொருத்தமான ஒருவரைத் தெரிவுசெய்யமுடியும்.

மாறாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் உள்ளிட்டோர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உயர்நீதிமன்றத்துக்கு எதிராகக் குழப்பம் விளைவிப்பதற்கு முற்படுவார்களேயானால், ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நாட்டுக்கு மிகமோசமான சேதம் ஏற்படும் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.


பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன, தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றுவதற்கு இடைக்காலத் தடைவிதித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுக்கு எவ்வித சட்டவலுவும் கிடையாது என்பதால் அதனை ஏற்கமுடியாது எனவும், அரசியலமைப்புப்பேரவையின் அதிகாரத்தை நீதிமன்றத்தினால் சவாலுக்கு உட்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் தான் போட்டியிடவிருப்பதால் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய பதில் பொலிஸ்மா அதிபரொருவரை நியமிப்பதிலிருந்து தான் விலகியிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் அறிவித்தார். அதுமாத்திரமன்றி தேசபந்து தென்னக்கோன் விவகாரத்தில் உயர்நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு முரணான கருத்துக்களையும் அவர் வெளியிட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் உயர்நீதிமன்ற உத்தரவைப் புறந்தள்ளும் வகையிலான இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 - 01 - 1937



மறைவு
29 - 07 - 2024

## சிவசுப்பிரமணியம் உதயகுமாரன்

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சிவசுப்பிரமணியம் உதயகுமாரன் அவர்கள் 29.07.2024 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் உதயகுமாரன் மாதர்க்கரசி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகாதேவன், சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோமதி, உமாரதி, சுமதி, சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தராஜா, குருராஜ்(ரமேஸ்), ஞானசுந்தரம், ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்தனா, ஷியாம், சாய் சாதனா, துர்க்கா, சாய் அபர்னா, சாய் அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் அஸ்வினின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்


தகவல்:
அன்னாரின் உறவினர்கள்

(1587)


நாகபூஷணி திருமண சேவை
பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்
எம்மிடம் மணமக்கள் ஜாதகங்கள் பல்லாயிரக் கணக்கில் உள்ளன. பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.
10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (BCAS கம்பஸ் இற்கு அருகில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306
(211)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலன சபையின் பொருளாளராக இருந்து ஆலய வளர்ச்சிக்காக அயராது உழைத்த சிறப்புக்குரிய

## காசிவிஸ்வநாதன் கணேசமூர்த்தி

(ஓய்வு நிலை கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர்)

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகியம்மன் பாதங்களில் சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 02.09.1945 மறைவு 30.07.2024


பரிபாலன சபையும்
தொண்டர் சபையும், வட்டுக்கோட்டை.

கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்
கண்ணகியம்மன் ஆலயம்

(C-891)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி ஆலய
## திருவிழாவிற்கான காளாஞ்சி கையளிப்பு





(யாழ்ப்பாணம்)
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழாவிற்கான கொடிச் சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

வள்ளியம்மை திருக் கல்யாணப் படிப்புடன், பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று, பாரம் பரிய முறைப்படி கொடிச் சீலை வழுங்கும் மரபுடையவர்களிற்கான காளாஞ்சி மாட்டு வண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)
தேயிலை, இறப்பர், தெங்கு, கறுவா மற்றும் மிளகு ஆகிய பெருந்தோட்ட பயிர் ஏற்றுமதி மூலம் முதல் 4 மாதங்களில் 1,118 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டப் பட்டுள்ளது.

விவசாய அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அந்த எண்ணிக்கை 234 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் இதே காலப் பகுதியில் குறித்த பயிர் ஏற்றுமதி மூலம் 884 மில்லியன் டொலர் வருமானமாக ஈட்டப் பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

# பாராளுமன்றத்தை கலைக்க திட்டமிடும் ரணில்?
## உயர் அரசியல் வட்டாரங்கள் தகவல்



**(கொழும்பு)**
**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அதிகாரத்திற்கு அமைய பாராளுமன்றத்தை கலைப்பார் என உயர் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றது.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னர் இரு கட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு வர முடியாத பட்சத்தில், பாராளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு பாராளுமன்றம் கலைக்கப்படுவது தடையல்ல என தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இரண்டு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவது சாத்தியம். ஆனால் இரண்டு தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்துவது சாத்தியமில்லை என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, தனது சின்னத்தின் கீழ் ஒரு வேட்பாளரை முன்வைக்கும் என்று நேற்று முன்தினம் பொது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தகக்து. (நி-6)

## முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)
அமைச்சரவையில் கடந்த மார்ச் 18 ஆம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரச வர்த்தக (பல நோக்கு) கூட்டுத்தாபனத்தால் இதுவரைக்கும் 224 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப் பட்டுள்ளன.

முட்டை இறக்குமதிக்காக வழங்கப்பட்டுள்ள காலப்பகுதி கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

அதற்கமைய, ரமழான் மற்றும் நத்தார் கொண்டாட்டக் காலங்களில் சந்தையில் முட்டை விலையை நிலைப்படுத்துவதற்காகவும், மற்றும் கேக் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளுக்குத் தேவையான முட்டைகளை இறக்குமதி செய்வதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-6)

## பிளந்தது மொட்டுக்கட்சி
# ரணிலுக்கு ஆதரவளிக்க மேலும் பல எம்.பிக்கள் தீர்மானம்

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளிக்க மேலும் பல எம்.பிக்கள் தீர்மானித்துள்ளனர்.

திலும் அமுனுகம, அனுப பஸ்குவல், கீதா குமாரசிங்க, அஜித் ராஜபக்ஷ, எஸ்.பி.திஸாநாயக்க, பிரேம்நாத் சி தொலவத்த, காஞ்சன விஜேசேகர உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்க தீர்மானித் துள்ளனர்.

மொட்டு சின்னத்தில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டும் என நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

எவ்வாறிருப்பினும் அந்த தீர்மானத்துக்கு எதிராக 11 எம்.பிக்கள் தமது வாக்குகளை அளித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் இரவு மேற்குறிப்பிட்ட எம்.பிக்கள் கொழும்பில் கூடி தமது நிலைப்பாடு தொடர்பில் கலந்தாலோசித்துள்ளனர்.

அதற்கமைய பெரும்பான்மை உறுப்பினர்களின் நிலைப்பாடுகளை ஏற்காமல் பொதுஜன பெரமுன வேட்பாளரைக் களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளதால், தாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருந்தார். (நி-6)

## பங்காளிக் கட்சி தலைவர்களுடன் சஜித் நாளை அவசர சந்திப்பு



(கொழும்பு)
எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நாளை முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி எதிர்வரும் 8 ஆம் திகதி மலரவுள்ளதுடன், அன்று புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச் சாத்திடப்படவுள்ளது.

எனவே, குறித்த உடன்படிக்கை ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே குறித்த விசேட சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# மணற்காடு றோ.க.த.க சம்பியன்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே போட்டியின் இறுதி யாட்டம் கிளிநொச்சி மைதானத்தில் நடை பெற்றது.

இதில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி முதலாமிடத்தையும் அனலைதீவு சதாசிவம் வித்தியாலய அணி இரண்டாமிடத்தையும் வாதரவத்தை விக் னேஸ்வரா வித்தியாலய அணி மூன்றாமிடத் தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

# கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு நீச்சல் போட்டியில் 18 பதக்கங்கள்

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் 18 வீரர்கள் நீச்சல் போட்டியில் வெற்றி பெற்று தேசிய போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

வடக்கு மாகாண நீச்சல் போட்டி கிளி நொச்சியில் நடை பெற்றது. இப்போட்டியில் 5 முதலிடம், 7 இரண் டாம் நிலை, 6 மூன் றாம் நிலை என 18 பதக்கங்களை வென்று தேசிய மட்டப் போட் டிக்கு தெரிவு செய்யப் பட்டு உள்ளனர். (நி-6-350)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3183


**லது**

உன் கல்யாணத்துக்கு நா வந்தேனே ஜானு...
நா உன்ன பாக்கலயேடா ராம்...
எப்படி பார்ப்பாய்.. நான் தான் மொத பந்திக்கே சாப்பிட்டு கிளம்பிட்டேனே...




**நதீஸ்**

காகம் கரைந்தது விருந்தாளிகள் வீட்டுக்கு வருகை என்று....
சேவல் பதறியது, நாம் இன்று விருந்தாக போகிறோம் என்று...



**நமசியா**

ரொம்ப பெரிய தொகையா லோன் வாங்குறீங்களே, எப்படித் திருப்பிக் கட்டுவீங்கன்னு யோசிச்சீங்களா?
எதுக்கு யோசிக்கனும் சேர், கையோட பாஸ்போர்ட்டும் எடுத்து வைத்திருக்கேன்...



**வதுஸ்**

ஏங்க ஆடி மாசம் பிறந்து விட்டதே... தள்ளுபடிலஎனக்கு என்ன வாங்கி தரப் போறீங்க !





கையில காசில்லாத காரணத்தால... இந்த வருசம் ஆடியவே தள்ளுபடி பண்றேன்!

**யாதவ்**

என்னங்க! உங்க பொறந்த நாளைக்கு நான் ஒரு ட்ரெஸ் எடுத்தருக்கோங்க...
வாவ்! சூப்பர். எங்கே எடுத்துட்டு வந்து காமி...




கொஞ்சம் பொறுங்க... போட்டு வந்தே காமிக்கிறேன்...

**சுவஸ்திகா**

எவ்வளவு சண்டை போட்டாலும் நம்மை தேடி வரும் உறவு எது?



கடன்காரன் சார்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்திக்கே ஆதரவு
# தயாசிறி தரப்பு திட்டவட்டம்



(கொழும்பு)
இந்த வருட ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு தமது கட்சியின் ஆதரவு வழங்கப்படும் என மனிதநேய மக்கள் கூட்டணியின் பிரசார செயலாளர் சமன் பிரியந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

கரந்தெனியவில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் தமது கட்சி பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்தியதாகவும், அனைத்துப் பேச்சு வார்த்தைகளும் வெற்றிகரமாக நிறைவடைந்ததையடுத்து மனிதநேய மக்கள் கூட்டணி இந்த புதிய தீர்மானத்திற்கு வந்துள்ளதாக சமன் பிரியந்த விஜேவிக்ரம விளக்கமளித்துள்ளார்.

இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பக் கூடிய தற்போதைய ஒரே தலைவர் சஜித் பிரேமதாச என்பதாலும் இந் நாட்டு மக்கள் சஜித் பிரேமதாசவைச் சுற்றி மிக நெருக்கமாக இருப்பதாலும் தமது கட்சிக்கு இந்த தீர்மானத்தை எடுப்பது இலகுவானது எனவும் சமன் பிரியந்த விஜேவிக்ரம தெரிவித்தார். (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL **உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (181)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


## யாழ்ப்பாணம் மாநகரசபை
## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் -2024

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் : ரூபா 1,000.00 + Vat 18%
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- 31.07.2024 தொடக்கம் 07.08.2024 வரை
  (ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- 08.08.2024 முற்பகல் 10.00 மணி வரை
- கேள்விப்படிவம் திறத்தல் :- 08.08.2024 முற்பகல் 10.00 மணிக்கு
- மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் :- ஆரம்ப கேள்வித் தொகையின் 2% அல்லது ரூபா 2,000.00 இத் தொகைகளில் கூடிய தொகை

❖ விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரிப் பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 08.08.2024 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

❖ கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் கடிதம் மூலம் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமூகமளித்தல் வேண்டும்.

❖ கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தாங்கள் சித்தி பெற்ற சகல கடைகளுக்குமான கேள்வித் தொகையினை 14.08.2024 ஆம் திகதி 2.30 மணிக்கு முன்னர் முன்னரங்கப் பகுதியில் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். தவறும் சந்தர்ப்பத்தில் தாங்கள் எந்தவொரு கடையையும் பெற்றுக்கொள்ள முடியாது

❖ கேள்வி கோரலில் சித்தியடைந்தோர் 14.08.2024 ஆம் திகதி 2.30 மணிக்கு முன்னர் கேள்வித் தொகையினைச் செலுத்தத் தவறிய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.


மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(சி-888)

மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு-02.09.1945. இறப்பு-30.07.2024

அமரர்.திரு
## காசிவிஸ்வநாதன் கணேசமூர்த்தி
( ஓய்வு நிலை உத்தியோகத்தர் வர்த்தக வங்கி)

அவர்களின் மரணச் செய்தி அறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-886)

பிரிவினால் துயருறும்
K.M.V.R ஆயுர்வேத மருந்துக்கடை,கே.கே.எஸ் வீதி, மாவிட்டபுரம்.

# இராசிபலன்

31.07.2024
ஆடி 15, புதன்கிழமை
ஏகாதசி முன்னிரவு 6.14 மணிவரை
ரோகிணி பிற்பகல் 1.05 மணிவரை

சுபநேரம்-4.33-6.03 மணிவரை
இராகுகாலம்-12.03-1.33 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை.

வளவன்

**மேஷம்**
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் நாட்டம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்**
எந்த ஒரு வேலையையும் நாளை என்று தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.

**மிதுனம்**
தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் செய்யலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்**
வருமானம் பெருகி வளம் காணும் நாள், அரச வழியில் எதிர் பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்**
தொட்ட காரியங்கள் துளிர் விடும் நாள், தொழில் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**கன்னி**
வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு,உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்**
பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது,பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம்.

**விருச்சிகம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு**
இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவீர்கள், உற்சாகமான நாள்.

**மகரம்**
செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், மறைமுகப் போட்டிகள் மாறும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்**
உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**மீனம்**
உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிதாகக் கிடைத்த பொருட்களுக்கு சரியான மதிப்பு இருக்காது.

# உடற்பயிற்சி, போசாக்கு இன்மையால்

## உடல் பருமன் அதிகரிப்பு-சுகாதார அமைச்சு



(கொழும்பு)

போதிய உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு இன்மையினால் நாட்டில் பெண்கள் மற்றும் ஆண்கள் மத்தியில் அதிக எடை மற்றும் உடல் பருமன் விகிதம் வேகமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற மருத்துவ முகாம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் சுமார் 48 சதவீதமான பெண்கள் அதிக எடையுடனும் 33.3 சதவீதமான ஆண்கள் தங்கள் ஆரோக்கியமான எடையை விட அதிக எடையுடனும் உள்ளார்கள்.

சர்க்கரை, கொழுப்பு மற்றும் உப்பு அதிகமாக உட்கொள்ளும் போது உடற்பயிற்சி செயற்பாடு குறைவாக உள்ளது. அத்துடன், அத்தியாவசிய காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்கொள்ளல் குறைந்துள்ளது.

மேலும் பெரும்பாலான மக்கள் தங்கள் நோய்களைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அதிக எண்ணிக்கையிலான மக்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

நாட்டின் முதியவர்களில் 42 சதவீதமானவர்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# எமது பிள்ளைகள் எங்கே?

## உறவுகள் கவனயீர்ப்பு




(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க அலுவலகத்திற்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச நீதி தேவை, ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே? போன்ற கோசங்களையும் பதாகைகளையும் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளின் படங்களையும் தாங்கியவாறே குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சியில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 2802 நாட்கள் ஆகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)



யாழ்.இந்துக் கல்லூரியின் 2008 ஆம் ஆண்டு பிரிவு - பழைய மாணவர்களால் திருநெல்வேலியிலுள்ள கருணாலய பெண்கள் சிறுவர் இல்லத்துக்கு கடந்த சனிக்கிழமை 1 லட்சம் ரூபாய் பெறுமதியான ஆடைகள் மற்றும் மதியபோசனத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்: சிவசாந்தன்)

# கொடிகாமத்தில் கத்திக்குத்து

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் கிராமத்தில் அமைந்துள்ள தவறணை ஒன்றின் பணியாளர் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை கத்திக்குத்து நடத்தப்பட்டுள்ளது.

தவறணையில் இடம்பெற்ற மேற்படி கத்திக்குத்தில் தவறணைப் பணியாளர் முகம் மற்றும் தலைப் பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவக வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| இல | பாடசாலையின் பெயர் | பாடசாலையின் வகை |
|---|---|---|
| 01 | யா/நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் | Type-II |
| 02 | யா/அனலைதீவு வடலூர் அ.த.க பாடசாலை | Type-III |
| 03 | யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம் | Type-III |
| 04 | யா/புங்குடுதீவு மேற்கு அ.மி.த.க பாடசாலை | Type-III |
| 05 | யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க வித்தியாலயம் | Type-III |

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் நிபந்தனைகளுடன் இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருடங்களாவது சேவையாற்றக் கூடிய வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்.

2. Type-II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம்-II உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை தரம்-II உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எவையும் கிடைக்கப்பெறாவிடத்து மட்டும் அல்லது தெரிவுகள் இடம் பெறாவிடத்து மட்டும் இலங்கை அதிபர் சேவை தரம்-III விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

3. Type-III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம்-III உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப் பிரிவில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் 2024.08.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், குறிகட்டுவான் வீதி, வேலணை" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன் அறிவித்துள்ளார். (நி-6)

# யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் "யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா 2024" ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை தொடர்ந்து மூன்று நாட்கள் யாழ்.கலாசார நிலையத்தில் இடம்பெறவுள்ளன.

இதன்போது புத்தக வெளியீடுகள், அறிமுக நிகழ்வுகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (நி-6-33)

# யாழ்.மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவானது நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் பாடசாலை அதிபர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சிபிரதேச சபை செயலாளரும் பாடசாலை பழைய மாணவருமான ரி.முகுந்தனும் சிறப்பு விருந்தினராக கொழும்பு Sunshine Tea (Pvt) Ltd நிறுவனத்தின் உதவி முகாமையாளரும் பாடசாலை பழைய மாணவருமான பி.விஜயகாந்தனும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மத்திய கல்லூரியின் O/L (1995), A/L (1998) பழைய மாணவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் உபஅதிபர் திருமதி. ரூபகௌரி முகுந்தன் நிகழ்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைக்கவுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக உலகம்

## LOLC திவி சவிய நாடு முழுவதும் கல்வி நிலைமையை மாற்றுகிறது

இலங்கை முழுவதும் 3,500 பாடசாலைகளை கடந்து செல்கின்றது, மொத்த பாடசாலைகளில் 35% ஐ தாண்டியது

LOLC திவி சவிய மனிதாபிமான முயற்சியானது 3,500 பாடசாலைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம், இலங்கையில் உள்ள மொத்தப் பாடசாலைகளின் எண்ணிக்கையில் 35% ஐத் தாண்டி, ஒரு குறிப்பிடத்தக்க அடையாளத்தை எடுத்துக்காட்டியுள்ளது.

2023 பெப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்ட இந்த முயற்சியானது, நாட்டின் இளம் மனங்களை சீராகவும் தொடர்ச்சியாகவும் சென்றடைந்து வளப்படுத்தியது. திட்டத்தின் 3 ஆம் கட்டத்திற்கு முன்னேறும் போது, LOLC திவி சவிய 101-150 மாணவர்கள் தங்கும் பாடசாலைகளில் கவனம் செலுத்துகிறது. இந்த மூலோபாய நடவடிக்கை யானது மிகவும் பின்தங்கிய பாடசாலைகள் கூட அத்தியாவசிய கல்வி வளங்களை அணுகுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் (பாடசாலை அலுவல்கள்) திருமதி. நீலமணி மாளவியாரச்சி, அத்தியாவசிய பாடசாலை உபகரணங்களை வழங்குவதில் பெற்றோர்கள் எதிர்நோக்கும் சவால்களை எடுத்துரைத்து இந்த முயற்சியை பாராட்டினார். "பாடசாலை சீருடைகள், பாடத்திட்டங்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடப்புத்தகங்களை அமைச்சகத்தின் மூலம் மாணவர்களுக்கு வழங்கினாலும், குழந்தைகளுக்குப் பாடசாலை பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் துணைப் பொருட்களை வழங்க பெற்றோரின் ஆதரவை நாங்கள் நாடுகிறோம்.

இருப்பினும் இந்த நாட்டில் சில பெற்றோர்கள் உள்ளனர். இன்றைய பொருளாதாரச் சவால்களின் கீழ், குடும்பத்தில் சில குழந்தைகளைக் கொண்ட நடுத்தர வர்க்கப் பெற்றோர்கள் கூட இந்தச் சூழ்நிலையில், LOLC இன் தலையீடு பாராட்டத்தக்கது என தெரிவிக்கிறார்கள். திவி சவிய இந்த மாணவர்களுக்கு ஒரு விரிவான பாடசாலை தொகுப்பை வழங்குகிறது, அங்கு ஒவ்வொரு மாணவர்களையும் வகுப்பறையில் ஏற்றத்தாழ்வு இல்லாமல் கற்றுக் கொள்வதற்கு சமமானதாகவும் பாக்கியமாகவும் உணர்கிறார்கள்.

திவி சவிய முன்முயற்சியின் மூலம் இந்த மாணவர்களின் தேவைகளை சமமாக கருதி, அவர்களின் மனதில் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கு LOLC வெற்றி யீட்டியுள்ளது. திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து, மாணவர்கள் வகுப்பறை நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுகிறார்கள் மற்றும் மகிழ்ச்சியுடன் கற்றுக்கொள்கி றார்கள். கல்வி அமைச்சின் அதி காரியாகவும் ஒரு தாயாகவும், இந்த நாட்டின் குழந்தைகளுக்கு LOLC வழங்கிய ஆதரவை நான் உண் மையிலேயே பாராட்டுகிறேன்."

LOLC திவி சவிய, அதன் ஆரம்பக் கட்டத்தில், 1,400 இற் கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் கணிதக் கருவிப்பெட்டிகள் உட்பட முக்கியமான பாடசாலைப் பொருட் களை வெற்றிகரமாக விநியோகித் தது. அடுத்த கட்டமாக இந்த வரம்பை கூடுதலாக 1,500 பாடசாலைகளுக்கு விரிவுபடுத்தியது. கட்டம் 3 தொடங்குவதன் மூலம், இந்த முயற்சியானது கூடுதலாக 1,200 பாடசாலைகளை உள்ளடக் குவதை நோக்கமாகக் கொண்டுள் ளது, மொத்த முதலீடு ரூ. 2.5 பில்லியன்.

கல்வி அமைச்சு LOLC இன் குறிப்பிடத்தக்க முயற்சிகளை தேசிய அங்கீகாரத்துடன் கௌரவித்துள்ளது. இது தேசத்தின் மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவதிலும் வள இடைவெளியைக் குறைப்பதிலும் அதன் மனிதாபிமானப் பணிக்காக ஒரு தனியார் துறை நிறுவனம் இத்தகைய மதிப்பிற்குரிய அங்கீகாரத்தைப் பெற்ற முதல் தடவையாகக் குறிப்பிடுகிறது.

2024 மற்றும் அதற்குப் பின்னரும் இலங்கையின் கல்விக்கான பாதை சவாலானது. எவ்வாறாயினும், LOLC, ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் (SDGs) இணைந்து, இலங்கையின் கல்வி நிலப்பரப்பில் வரவிருக்கும் ஆண்டுகளில் நிலையான செல்வாக்கு செலுத்துவதில் உறுதியாக உள்ளது. குறிப்பாக, இந்த முன்முயற்சி SDG 4 உடன் இணைகிறது, இது உள்ளடக்கிய மற்றும் சமமான தரமான கல்வியை உறுதி செய்வதையும், அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து விரிவடைந்து வருவதால், இலங்கையின் எதிர் கால கல்வியை வடிவமைப்பதில் இது ஒரு முக்கிய பங்கை வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை.






# பெரமுன வேட்பாளர் தம்மிக்க பெரேராவே

## கசிந்த தகவல்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக பாரளு மன்ற உறுப்பினரும் தொழிலதிபருமான தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்தக் கட்சியின் உறுப்பினரும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டத்தின் போது, மொட்டுச் சின்னத்தில் பிரத்தியேக வேட்பாளரை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த வேட்பாளரை இந்த வாரம் அறிவிக்கவுள்ளதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும் அந்தக் கட்சி தம்மிக்க பெரேராவையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க விருப்பதாக உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 2<br>உயரம் : 5'11"<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: B/14246 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 25 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: PHD, Teaching Assistant<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/11178 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 68<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்: HNDT,IT Officer<br>எதிர்பார்ப்பு: அரச மற்றும் தனியார் தொழில்<br>தொ.இ: B/14269 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: Engineer (Final Year)<br>எதிர்பார்ப்பு:உயர்வான கல்வித்தகைமை<br>தொ.இ: G/14204 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 44 1/2<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14276 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: Diploma , Teacher<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள ஆண்<br>தொ.இ: G/14208 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# கேரளாவில் பாரிய நிலச்சரிவு 50 பேர் உயிரிழப்பு

## மீட்புப் பணி தீவிரம்



(டில்லி)

இந்தியாவின் கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட பாரிய நிலச்சரிவில் சிக்கி 50 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் காணாமல் போயுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கேரள மாநிலம் மேப்பாடி என்ற பகுதியில் நேற்று இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையினரும் நிவாரணக் குழுக்களும் அங்கு சிக்கியுள்ள மக்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனமழை காரணமாக மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களில் சிலர் சாலியாறு ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கானோர் நிலச்சரிவில் சிக்கி உள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதையடுத்து காணாமல் போனவர்களை மீட்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (நி-6)

# 3 ஆம் உ

# கைே

(லண்டன்) —


அண்மையில் ர
விமானங்கள் ஒன்
நடத்திய போர்
ஏற்படுத்தியிருந்த

அத்துடன் போர் பதற்றங்கள் ஏதும் நடந்தால் அதனை கட்டுப்படுத்த அமெரிக்க மற்றும் கனேடிய போர் விமானங்கள் அவசரமாக அனுப்பி வைக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

எனினும் ரஷ்ய மற்றும் சீன போர் விமானங்கள் இணைந்து சர்வதேச எல்லையில் நடத்திய

# ஒலிம்பிக்கை நிறுத்த சதித்திட்டம்?

## தொலைத் தொடர்பு சேவைகளும் முடக்கம்



(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 2024 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் கடந்த சனிக்கிழமை முதல் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலையில் பிரான்ஸ் நாட்டின் முக்கிய நகரங்களை இணைக்கும் பிரதான ரயில் வழித்தடங்களில் ஒரே நேரத்தில் திட்டமிட்டு தீ வைக்கப்பட்டது. பிரான்ஸின் அதிவேக ரயில் சேவையை மர்ம நபர்கள் திட்டமிட்டு முடக்கினர். இச்சம்பவங்களால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த தீ விபத்து தாக்குதலால், பல வழித்தடங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால், சுமார் 8 லட்சம் பயணிகள் பாதிக்கப்பட்டனர். இதனால், ஒட்டுமொத்த போக்குவரத்து அமைப்பும் சீர்குலைந்தது. பின்னர் பாதிப்புகள் மெல்ல மெல்ல சரிசெய்யப்பட்டு போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.


இந்த நிலையில் தான் நேற்று முன்தினம் பிரான்ஸ் நாடு நெடுகிலும் பல்வேறு இடங்களில் தொலைத் தொடர்பு (டெலிகாம்) கேபிள்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. பைபர் ஆப்டிக்ஸ் தொலைத் தொடர்பு கேபிள்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளதால் செல்போன் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் நடந்துவரும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு பாதிப்பு ஏற்படுமா என்ற கேள்வி நாடுகளிடையே எழுந்துள்ளது. (நி-6)



# ரஷ்யாவில் ரயில்

- இருவர் உயிரிழப்பு
- 140 இற்கும் மேற்பட்டே




(மொஸ்கோ)

ரஷ்யாவின் தென்பகுதியில் பயணிகள் ரயில் ஒன்று கனரக வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 140 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கனரக வாகனம் தண்டவாளத்தைக் கடக்கும் போது இந்த விபத்து நேர்ந்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்தின்போது ரயிலில் 800



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் போருக்கான ஆரம்பப் புள்ளி
# கோர்த்த ரஷ்யா, சீனா!

**ல் ரஷ்யா மற்றும் சீனாவின் போர் ஒன்றிணைந்து சர்வதேச எல்லையில் போர்ப் பயிற்சிகள் பதற்றத்தை ந்தது.**



போர்ப் பயிற்சிகளால் எந்தவித அச்சுறுத்தல்களும் இல்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பக்கிங்காம் பல்கலை அரசியல் துறை பேராசிரியரான அந்தோனி கிளஸ், ரஷ்ய மற்றும் சீன போர் விமானங்கள் இணைந்து சர்வதேச எல்லையில் கடல் பரப்பில் குண்டு வீசும் திறன் கொண்ட போர் விமானங்களைக் கொண்டு போர் ஒத்திகை நடத்தியது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாஸி ஜேர்மனியும் ஏகாதிபத்திய ஜப்பானும் இரண்டாம் உலகப்போரில் கைகோர்த்தன. அதேபோன்றதொரு உறவை ரஷ்யாவும் சீனாவும் உருவாக்கியுள்ளன. ஆக அவர்கள் உலகை மூன்றாம் உலகப்போரை நோக்கி தள்ளக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)


## ல் விபத்து!

### டோர் படுகாயம்

பயணிகள் இருந்துள்ள நிலையில் சுமார் 140 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்தவர்களில் 15 குழந்தைகள் உட்பட 30 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரயிலின் 7 பெட்டிகள் தடம் புரண்டுள்ள நிலையில், மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (நி-6)



## வடகொரியாவில் வெள்ளப்பெருக்கு
## அவசர நிலை பிரகடனம்



(பியாங்யாங்)

வடகொரியாவில் கன மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களைக் கருத்தில் கொண்டு வடகொரிய ஜனாதிபதி கிங் ஜாங்-உன் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடகொரிய ஜனாதிபதியின் வாகன அணிவகுப்பு வெள்ளம் சூழ்ந்த வீதியில் பயணிப்பதைக் காட்டும் புகைப்படத்தையும் வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

இதேவேளை சினுஜு மற்றும் உய்ஜு பகுதிகள் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பாதிக்கப்பட்ட 4,000 இற்கும் மேற்பட்ட மக்களை விமானங்கள் மூலம் வெளியேற்ற அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். (நி-6)

## பிரிட்டனில் கத்திக்குத்து
## இரு சிறுவர்கள் உயிரிழப்பு
### ஆறு சிறுவர்கள் கவலைக்கிடம்

(லண்டன்)

பிரிட்டனின் சௌத்போர்ட்டில் நடத்தப்பட்ட கத்தி குத்து தாக்குதலில் இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த கத்தி குத்து சம்பவத்தில் மேலும் 9 சிறுவர்கள் காயமடைந்துள்ளதுடன் அவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் மேலும் இரு பெரியவர்களின் நிலையும் கவலைக்கிடமாக உள்ளதாகவும் அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறுவர்களின் கலை நிகழ்ச்சி ஒன்றிலேயே இந்த கத்தி குத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த கத்திகுத்தை மேற்கொண்ட 17 வயதான நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எதற்காக இந்த கத்தி குத்து நடத்தப்பட்டது என்பது இதுவரை தெரியவில்லை என்பதுடன் இது தீவிரவாத தாக்குதல் கிடையாது என அந்த நாட்டு பாதுகாப்பு பிரிவு அறிவித்துள்ளது. (நி-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் இன்புளுவென்சா

(கொழும்பு)

**நாட்டில் இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சல் வேகமாக அதிகரித்து வருவதால் கொவிட் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.**



இது தொடர்பில் சிறுவர் வைத்திய நிபுணர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவிக்கையில்,

குறிப்பாக சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி குறைவாகவுள்ளவர்கள் கொவிட் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

"சிறுவர்கள் மற்றும் வயதானவர்கள் முகக்கவசங்களை அணிய வேண்டும், கைகளை நன்கு சுத்தமாக கழுவ வேண்டும், பொது போக்குவரத்து உள்ளிட்ட சன நெரிசலான இடங்களில் இடைவெளியை பேண வேண்டும்.

பாடசாலைகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் வைரஸ் காய்ச்சல் அதிகளவு பரவுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் உடல் நிலையை உன்னிப்பாகக் கண்காணிக்குமாறும், ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் அவர்களைப் பாடசாலைகள் அல்லது குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதைத் தவிர்க்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 150-250 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 250 | 200 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 500 | 400-500 | 500 |
| தக்காளி | 400 | 300 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 160 | 120-140 | 200 |
| கோவா | 350 | 350 | 400 | 250 | 400 |
| கரட் | 350 | 450 | 500 | 400 | 500 |
| பூசணி | 200 | 180 | 200 | 150 | 250 |
| புடோல் | 150 | 180 | 180 | 160 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 160-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 350 | 200-550 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 800 | 300 | 600 | 400 | 600 |
| வெண்டக்காய் | 160 | 200 | 250 | 250-300 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 160 | 160 | 100 | 240 |
| பயற்றங்காய் | 300 | 220 | 150 | 100-150 | 200 |
| லீக்ஸ் | 550 | 500 | 500 | 350 | 500 |
| பீற்றூட் | 400 | 400 | 500 | 450 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 1400 | 400 | 1200 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 250 | 80-100 | 200 |
| போஞ்சி | 600 | 650 | 700 | 400 | 800 |
| கத்தரி தம்புள்ள | 150 | 250 | 300 | --- | 250 |
| கீரை - 1 பிடி | 50 | 100 | 50 | 50 | 80 |
| தேசிக்காய் | 600 | 700 | 600 | 550-600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 480 | 600 | --- | 600 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 300 | --- | 300 |
| முள்ளங்கி | 120 | 100 | 150 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 60 |

## இன்று ஒரு தகவல் 199



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# முயலுக்கு மூன்றுகால்

ஒரு ஊரில் ஒரு குருவும் சிஷ்யனும் இருந்தார்கள். ஒரு மாதிரியான குருவும் சிஷ்யனும்.

அந்த சிஷ்யன் ஒரு நாள் முயல் வேட்டைக்கு கிளம்பினான். காட்டிற்குப் போனான். ஒரு முயல் கிடைத்தது. பிடித்துக் கொண்டு வந்தான். நெருப்பிலே சுட்டு அதன் காலிலே ஒன்றை மட்டும் இவன் சாப்பிட்டான். மீதி மூன்று கால் இருந்தது.

அதைக் கொண்டு போய் தன் குருவிடம் கொடுத்தான். மிகவும் பணிவுடன். அந்த குரு என்ன அந்தளவிற்கு ஒன்றும் தெரியாத அப்பாவியா? மிகவும் ஊக்கமாக இன்னொரு கால் எங்கே என்று கேட்டார்.சிஷ்யன் பார்த்தான். நான் பிடித்த முயலிற்கு மூன்று கால் தானே இருந்தது என்றான்.

சிஷ்யன் பொய் சொல்கின்றான் என்பது குருவிற்கு தெரிந்து விட்டது. சரி இவன் சொன்னது தான் சொன்னான் பொய்யை காப்பற்றுகின்ற சமார்த்தியமாவது இவனுக்கு உண்டா என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

அதனாலே அப்போதைக்கு அந்த விடயத்தை அப்படியே விட்டுவிட்டார். அதன் பின் சிறிது நாள் கழித்து சிஷ்யனைக் கூப்பிட்டு நீ பிடித்த முயலிற்கு எத்தனை கால் என்று கேட்டார். அவனும் இப்படியே பதில் சொன்னான். மூன்று கால் தான் சாமி என்று சாதித்தான் அவன். மறுபடியும் ஒரு தடவை இப்படியே கேட்டார். அவனும் இப்படியே பதில் சொன்னான். சரி பரவாயில்லை. சிஷ்யன் பொய்யைக் காப்பற்றுவதிலே மிகவும் பிடிவாதமாக இருக்கின்றான் என்பதை தெரிந்து கொண்டார். இவனுக்கு இன்னொரு பரீட்சை வைத்து பார்க்கலாம் என்று முடிவு செய்தார்.

சிஷ்யனைக் கூப்பிட்டார். என்ன சுவாமி என்று வந்து நின்றான். அவன் நெற்றியிலே அகலமாக ஒரு பொட்டு வைத்தார். நீ தினமும் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும். என்றார். செய்கின்றேன் என்றான்.

நீ என்ன செய்ய வேண்டும் என்றால் தினமும் ராஜாவிற்கு வைத்திருக்கின்ற சாப்பாட்டை தெரியாமல் திருடிக்கொண்டு வந்து என்னிடம் கொடுக்க வேண்டும் என்றார்.

இவ்வளவும் தானே கவலைப்படாதீர்கள் என்று சொல்லிவிட்டு அவன் போனான். சொன்னது மாதிரியே சாப்பாட்டை தெரியாமல் எடுத்துக் கொண்டு வந்து விட்டான்.

ஒரு நாள் இரண்டு நாள் இல்லை. தொடர்ந்து இதே மாதிரி செய்ய ஆரம்பித்து விட்டான். ராஜா பார்த்தார். தினமும் தன்னுடைய சாப்பாடு திருட்டுப் போகின்றது. அவருக்கு மிகவும் அவமானமாகப் போய்விட்டது.

திருடன் யார் என்பதை கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்று தீர்மானம் செய்துவிட்டார். என்னுடைய சாப்பட்டைத் திருடிக் கொண்டு போகின்றவர்கள் யார் என்பதை கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு என்று அறிவித்தார்.

இந்த குரு ராஜாவிடம் போனார். சாதம், கறி, குழப்பு எல்லாம் சூடாக இருக்கின்ற மாதிரி சுடச்சுட வைத்திருந்தால் திருடனைக் கண்டுபிடித்து விடலாம் என்றார். குரு அப்படி சொல்கின்றாரே என்பதற்காக ராஜாவும் அதே மாதிரி சாதம், குழம்பு எல்லாம் சூடாக ஆவி பறக்கின்ற அளவிற்கு இருக்கின்ற மாதிரி ஏற்பாடு செய்து விட்டார்.

இந்த சிஷ்யன் நெற்றியிலே பொட்டு வைத்துக் கொண்டு வழக்கம் போல் ராஜாவுடைய சாப்பாட்டைத் திருடப் போனான். பாத்திரம் எல்லாம் சூடாக இருந்தது. ஆவி பறந்தது. இவன் நைசா இந்த பாத்திரத்தை தூக்கிக் கொண்டு மெதுவாக வந்தான்.

அந்த ஆவி இவன் நெற்றியிலே பட்டு அங்கேயிருந்த பொட்டு வேர்வையிலே கரைந்து போய்விட்டது. பொட்டு அழிந்து இருப்பதை வைத்து திருடன் யார் என்பதை சுலபமாக கண்டுபிடித்து விட்டார் ராஜா.

அதற்கு பிறகு சும்மா இருப்பாரா? உடனே என்னுடைய சாப்பாட்டைத் திருடிய இவனை சிரச்சேதம் செய்யுங்கள் என்றார். அதாவது அவன் தலையை வெட்டிப் போட உத்தரவிட்டார்.

தண்டனையை நிறைவேற்றுவதற்காக அவனை அழைத்தக் கொண்டு போகின்றார்கள். அந்த சமயத்திலே குரு அங்கே வருகின்றார்.

அடேய் சிஷ்யா! இப்பொழுதாவது நீ பிடித்த முயலிற்கு எத்தனை கால் என்று உண் மையைச் சொல் உன்னை இந்த தண்டனையிலிருந்து காப்பாற்றிவிடுகின்றேன் என்றார். அப்போதும் அவன் நான் பிடித்த முயலிற்கு மூன்று கால் தான் சாமி என்று சாதித்தான்.

குரு அசந்து போய்விட்டார். சிஷ்யனுடைய திடசித்தம் அவரை ஆச்சரியப்பட வைத்தது. நேராக ராஜாவிடம் போய் இவனுக்காக சிபாரிசு செய்து சிஷ்யனிற்கு கொடுத்த தண்டனையை ரத்து செய்தவிட்டார்.

அதன்பின் சிஷ்யனை அழைத்தக் கொண்டு போய் உட்காரவைத்து உபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டாராம். சொன்னது பொய்யாக இருந்தால் கூட அந்த பொய்யைக் காப்பாற்றுவதிலே எவ்வளவு உறுதியாக இருக்கின்றான் பாருங்கள் அந்த ஆள்.

இன்னொரு சிஷ்யன் இருந்தான். அவன் சொன்னான் எனக்கு ஒரு குரு இருக்கின்றார். நானும் கூட முயல் பிடித்தேன். காலைச் சுட்டுச் சாப்பிட்டேன். இருந்தாலும் எனக்கும் குருவிற்கும் இடையிலே இது மாதிரி விவகாரமே வராமல் பார்த்துக் கொண்டேன் என்றான்.

மிகவும் கெட்டிக்காரன் போல இருக்கின்றது . அது எப்படி என்று கேட்டேன் அவனிடம்.அந்த சிஷ்யன் ஒரு காலைத் தான் சாப்பிட்டு மூன்று காலை குருவிடம் கொடுத்ததனாலே தானே விவகாரம் வந்தது. நான் அப்படி செய்யவில்லை. நான்கு காலையும் நானே சாப்பிட்டேன். குருவிடம் போய் வேட்டையிலே ஒரு முயல் கிடைத்தது. அதற்கு நான்கு காலுமே இல்லை என்று ஒரேயடியா அடிச்சுவிட்டேன் என்றான். அதை நம்புகின்ற அளவிற்கு உன் குரு முட்டாளா? என்று கேட்டேன்.

ஆமாம் அதனாலே தான் அவர் எனக்கு குருவாக இருக்கின்றார் என்றார். அந்த சிஷ்யன் மிகவும் சாவகாசமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை பொதுச்சந்தை
## கடைத் தொகுதியில் தீப்பரவல்
### அனைத்து பொருட்களும் எரிந்து நாசம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் அமைந்துள்ள பிரதேச சபையின் பொதுச்சந்தை கட்டடத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தீ விபத்தில் இரண்டு கடைகள் மற்றும் ஒரு களஞ்சியம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன். இந்தக் கடைகளில் இருந்த அனைத்து பொருட்களும் தீயினால் சாம்பலாகியுள்ளன.


சம்பவம் நடந்த போது அங்கு இருந்த காவலாளிகள் மற்றும் அப்பகுதியில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர எடுத்த நடவடிக்கையால் ஏனைய கடைத்தொகுதிகளுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

தீவிபத்து சம்பவம் தொடர்பில் பிரதேச சபையின் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக்காலமாக தீ விபத்துச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு தீ விபத்தினை கட்டுப்படுத்தும் தீயணைப்பு பிரிவு இல்லாத நிலை தொடர்ந்து காணப்பட்டு வருகின்றது. (நி-6-299)

# மருதமடு அன்னையின்
## திருவிழாவுக்கான கலந்துரையாடல்

(மன்னார்)



மடுத் திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான முன் ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக இடம்பெற உள்ளது.

வருடா வருடம் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கலந்து கொள்ள நாட்டின் பல பாகங்களில் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வது வழமை.

இந்நிலையில்வருகை தரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சுகாதாரம், போக் குவரத்து, மருத்துவ வசதிகள், நீர் விநியோகம், உணவு விநியோகம் மற்றும் சட்டம் ஒழுங்கை பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த முன்னாயத்த கலந்துரையாடலில் குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம், மடுத் திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம், இராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக் களத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.(நி-6-285)

# திருவையாறு மகாவித்தியாலயம்
## தரம் உயர்த்தப்படும்

(அக்கராயன்)

கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தினை தர முயர்த்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.க.காயத்திரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருவையாறு மகா வித்தியாலயத்தின் பொன் விழா மலர் வெளியீட்டு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இவ் விழாவுக்கு வருகை தந்த போது பாடசாலையினை தரம் உயர்த்துங்கள் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தற்போது இப்பாடசாலை 1சி பாடசாலையாக உயர்தரத்தில் கலை, வர்த்தக பிரிவுகளுடன் இயங்கு கின்றது. இந்நிலையில் இப் பாடசாலையினை தரம் உயர்த்துவதற்கு உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டும்.

அதேவேளை இப்பாடசாலையினை 1 ஏபி பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (நி-6-350)

# புதுமை நுட்பங்களினால் உத்வேகம்பெறும் விவசாய செய்கை



பேராசிரியர் சு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


கணனிமற்றும் இணையத்தளபயன்பாடு பல புதிய நுட்பங்களை விவசாய செய்கையில் உட்புகுத்தியிருக்கின்றது. இன்னமும் அதுசார்ந்து செயற்கை நுண்ணறிவின் பயன்பாடும் விரிவாக்கப்பட்டுள்ளது. விவசாயச்செய்கையில் வேலையாட்கள் கிடைக்கும் தன்மை மற்றும் அவர்கள் செய்யும் தொழில்களை வினைத்திறனாக செய்வதற்கான காலம் கனிந்து வந்து கொண்டிருக்கின்றது.

துல்லியமாக பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றை பெறப்படும் தகவல்கள் அடிப்படையில் சீர்செய்யும் வழிவகைகளை செயற்கை நுண்ணறிவின் மூலம் செயற்படுத்தும் நடைமுறைகள் விவசாய செய்கையில் இனியேற்படப்போகும் புரட்சி எனலாம்.

பாரம்பரியநடைமுறைகளுடன் இயந்திரங்களின் பாவனை விவசாய செய்கையில் பாரியளவில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவற்றினது வருகையின் மூலம் விவசாயசெய்கை எளிமையாக்கப்பட்டு உற்பத்தியின் செலவில் விவசாய இயந்திரங்களின் பாவனைமுக்கியபங்கு வகித்தது.

இருபினும் செய்கை முறைகள் இலகுவாக்கப்பட்டு பயிர்ச்செய்கை வினைத்திறனாக மாற்றப்பட்டது. இயந்திரங்களின் பாவனையால் விவசாய செய்கையில் அதிக லாபத்தை பெறுவதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கப்பட்டன. உற்பத்தியின் தரம், அவற்றை களஞ்சியப்படுத்தல் மற்றும் மதிப்பேற்றுஞ் செய்தல் என அவற்றின் பெறுமதி அதிகரிக்கப்பட்டது. இந்த மாற்றங்கள் இது வரையில் பயிருற்பத்தியில் விசேட பயன்பாடாக இருந்தாலும் இன்னும் மாற்றங்களை உட்புகுத்தும் நிலைமைக்கு விவசாய செய்கை வந்திருக்கின்றது.

காலநிலைமாற்றம் பயிருற்பத்தியில் அதீத பாதிப்பை ஏற்படுத்துகின்ற காரணியாக மாற்றம் பெற்றதிலிருந்து இன்னமும் அதீததொழினுட்பத்தின் தேவை எதிர்பார்க்கப்பட்டதொன்றாகி விட்டது. காலநிலை மாற்றத்தை துல்லியமாக அறிதலின் மூலம் அதுபயிருற்பத்தியில் ஏற்படுத்தப்படும் தாக்கத்திலிருந்து விடுபட அல்லது மீளவேண்டிய தேவை எழுந்திருக்கின்றது.



எதிர்பாராத வரட்சி, அதீத வெள்ளப்பெருக்கு, வளிவெப்பநிலை தொடர்ச்சியாக அதிகரிப்பு என இயற்கையின் சீற்றங்களை அண்மைக் காலங்களில் பல நாடுகளில் காணமுடிகின்றது. எமது தேசத்திலும் இந்த தாக்கங்கள் அதிகளவில் ஏற்படுவதனைநாம் உணரத் தலைப்பட்டிருக்கின்றோம்.

பயிரழிவுக்கு முக்கிய காரணியாக மாறியிருக்கின்ற காலநிலையின் தரவுகள் துல்லியமாக அறிந்துணரப்பட்டு மண்ணின் தன்மை அதிலுள்ளநீரின் அளவு.தேவையான சேதனப்பொருட்களின் இருப்பு. அதிலுள்ள காரஅமிலத்தன்மை. அகத்துறிஞ்சக் கூடிய பசளையின் அளவு. பீடைகள் மற்றும் நோய்களின் தாக்கம், களைகளின் அதீதபெருக்கம் இப்படி இன்னோரன்னகாரணிகளில் பயிர்ச்செய்கைதங்கியிருக்கும் நிலையில்செயற்கை நுண்ணறிவு, இணைய உலகம் அல்லது பொருட்களின் இணையம் மற்றும் இயந்திரவழி கற்றல் என்பன தற்போது விவசாய செய்கையில் பயன்படுத்துவதற்கு உலகம் தயாராகிவிட்டது.

தானியங்கிபொறி முறைகளை முழுவதுமாக பயன்படுத்தும் இவற்றினால் தேவையான அனைத்து தகவல்களையும் தேவையான உணரிகளைப் பயன்படுத்தி இணையவழிதகவல் சேமிப்பு பொறிமுறை மூலம் பெற்று அவற்றை அலசி ஆராய்ந்து அதற்கான தீர்வையும் செய்துமுடிக்கும் திறனை இவை கொண்டிருக்கின்றன.

இந்த தகவல்களை விவசாயிகளுக்கு மொபைல் அல்லது செல்பேசிதொழினுட்பம் மூலம் அறிவிக்கும் திறனும் விவசாயி ஒருவர் இந்தவிடயங்களை தமது செல்பேசியில் பெற்று அதன் மூலம் தனது விவசாய செய்கைகளைசெய்தலும் இதில் அடங்கும்.

மேலும் வளரும் பயிர்கள் அல்லதுகால்நடைகளில் வரும் நோய்கள் மற்றும் பிறதகவல்களைப் பெற அந்த நோய் அல்லது பீடைபற்றிய படங்களை தனது செல்பேசியில் படம் பிடித்தால் அவற்றை இது சார்ந்த நிறுவனத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்துக்கோ அனுப்பினால் அங்கே அந்த படங்களை ஆராய்ந்து என்ன நோய் அல்லது பீடை என்பதனையும் அதற்கான பரிகாரத்தையும் அந்த விவசாயிக்கு அனுப்பிவைப்பார்கள். கால்நடை வைத்தியரை அல்லது விவசாய போதனாசிரியரின் ஆலோசனையைபெறுவதற்கும் வழிகாட்டப்படுவர்.

இம்மாதிரியான தொழினுட்பத்துடனான விவசாயபெருமக்களுக்கான சேவைஅண்டை நாடுகளில் எப்போதோ ஆரம்பித்துவிட்டது. இவ்வாறான கணனி மற்றும் இணையவழி அறிவினைப் பயன்படுத்தி செல்பேசி தொழினுட்பத்தையும் பயன்படுத்தி விவசாயப் பெருமக்களுக்கு பயனுள்ள பல விடயங்களை அனுப்பி அவர்களை இணையவழி இணைப்பில் வைத்திருந்து விவசாயநடைமுறைகளைசெய்வதற்கு உதவலாம்.

மேலும் தற்போதுபலரும் தகவல் தொழினுட்பம் மற்றும் கணனிபற்றியஅறிவுஅத்துடன் செயற்கை நுண்ணறிவு என்பவற்றில் ஆர்வம் காட்டுவதனால் அவர்களுக்கான வேலைவாய்ப்பாகவும் இதனைமேற் கொள்ளலாம்.

கால நிலைமாற்றம் அதனால் ஏற்படக்கூடியவிளைவுகளை உணரிகள் போன்றவற்றை பயன்படுத்திதேவையான தகவல்களைப் பெற்று அதிலிருந்து காலநிலைமாற்றம் பற்றிய எதிர்வு கூறல்களை மேற்கொள்வதோடு அவற்றிலிருந்துவிவசாய பெருமக்களுக்கு தேவையான எதிர்வு கூறல்களை முன்கூட்டியே அவர்களுக்கு இலகுவழியில் கிடைக்கக்கூடியதாக புரிந்து கொள்ளக்கூடியதாகவும் ஏற்படுத்திக் கொண்டால் அது நிச்சயம் விவசாய பெருமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும். விவசாயசெய்கையில் ட்ரோன்கள் பலவகையான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படு கின்றது.

பீடைநாசினிவிசிறு வதற்கு, நோய் பீடைதாக்கத்தை படம் பிடிப்பதற்குபசளைப் பிரயோகத்திற்கு இன்னும் மகரந்த சேர்க்கைக்கு இந்ததொழினுட்பம் பயன்படுகின்றது. விவசாய பெருமக்களையும் கிராமத்தையும் நோக்கி உயர்நுட்பங்கள் நகர்த்தப்பட்டால் இன்னும் அவற்றின் பயன்பாடு எமது மக்களுக்கு கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 546





"இளையபிராட்டி கூறியதையெல்லாம் விவரமாகச் சொல்லு, அமுதா! என்னைப் புத்த சங்கத்தில் சேர்ந்துவிடும்படிதானே என் தமக்கை சொல்லி அனுப்பினார்?"

இதற்கு என்ன விடை சொல்வதென்று அமுதன் தயங்கிய போது, குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. பூங்குழலியும் சேந்தன் அமுதனும் திடுக்கிட்டார்கள்.

இளவரசரின் முகத்தில் ஒரு மாறுதலும் இல்லை.

"என் நண்பன் எங்கே? வாணர் குலத்து வீரன்?" என்று இளவரசர் கேட்டார். கேட்டுவிட்டுக் கண்கள் மூடிக் கொண்டார்.

சிறிது நேரத்துக்குள் குதிரை மீது வந்தியத்தேவன் தோன்றினான். படகு நின்றது, வந்தியத்தேவன் குதிரை மீதிருந்து இறங்கி வந்தான்.

"ஒன்றும் விசேஷமில்லை. நீங்கள் பத்திரமாயிருக்கிறீர்களா என்று பார்த்துவிட்டுப் போக வந்தேன். இனி அபாயம் ஒன்றுமில்லை" என்றான் வந்தியத்தேவன்.

"மந்திரவாதி?" என்று பூங்குழலி கேட்டாள்.

"இந்தப் படகில் இளவரசர் இருக்கிறார் என்ற சந்தேகமே அவனுக்கில்லை. நான் கூறியதை அவன் அப்படியே நம்பிவிட்டான்!"

"அவனைப் பார்த்தாயா?"

"பார்த்தேன், ஆனால் அவனுடைய பிசாசைப் பார்த்ததாகப் பயந்து பாசாங்கு செய்தேன்."

"உன்னைப் போல பொய் சொல்லக் கூடியவனை நான் பார்த்ததேயில்லை."

"பொய் என்று சொல்லாதே! கற்பனா சக்தி என்று சொல்லு. இளவரசர் எப்படியிருக்கிறார்?"

"நடுநடுவே விழித்துக் கொண்டு இரண்டு வார்த்தை சொல்கிறார் அப்புறம் நினைவு இழந்து விடுகிறார்."

"இந்தச் சுரமே அப்படித்தான்."

"எத்தனை நாளைக்கு இருக்கும்?"

"சில சமயம் ஒரு மாதம் கூட இருக்கும். சூடாமணி விஹாரத்தில் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள். பிக்ஷுகள் வைத்தியம் செய்தால், இரண்டு வாரத்தில் குணப்படுத்திவிடுவார்கள். ஜாக்கிரதை, பூங்குழலி! உன்னை நம்பித்தான் இளவரசரை ஒப்படைத்து விட்டுப் போகிறேன். உன் அத்தான் எங்கேயாவது கோவில் கோபுரத்தைக் கண்டால், தேவாரம் பாடிக்கொண்டு சுவாமி தரிசனத்துக்குப் போய் விடுவான்!"

சேந்தன்அமுதன், "உன்னோடு பழகிய பிறகு அப்படியெல்லாம் செய்ய மாட்டேன். சிவ கைங்கரியம் செய்யும் ஆசைகூட எனக்குக் குறைந்து விட்டது!" என்றான்.

"என்னால் குறைந்துவிட்டதா? அல்லது இந்தப் பெண்ணினாலா? உண்மையைச் சொல்!"

சேந்தன் அமுதன் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் "குதிரையை நான் சொன்ன இடத்தில் கண்டுபிடித்தாயா?" என்று கேட்டான்.


"குதிரை என்னைக் கண்டுபிடித்தது. இது நான் உன்னிடம் தஞ்சையில் விட்டு வந்த குதிரை அல்லவா?"

"ஆமாம்."

"இருட்டில் இது அடர்ந்த காட்டுக்குள்ளே என்னைப் பார்த்துவிட்டுக் கனைத்தது. அராபியர்களிடம் நான் அகப்பட்டுக் கொண்டதில் ஒரு விடயம் தெரிந்து கொண்டேன், அமுதா! குதிரைகளை வெறுங்காலோடு ஓடச் செய்வது பாவம். குளம்புக்கு அடியில் இரும்புக் கவசம் அடித்து ஓட்ட வேண்டும். முதன் முதலில் நான் பார்க்கும் கொல்லுப் பட்டறையில் இதன் குளம்புக்குக் கவசம் அடிக்கச் சொல்லப்போகிறேன். சரி, சரி! அதையெல்லாம் பற்றிப் பேச நேரமில்லை. மறுபடியும் உங்களையும் இளவரசரையும் பார்ப்பேனோ என்னமோ, தெரியாது. இளவரசர் மறுபடி விழித்தால் நான் பழையாறைக்குப் போகிறேன் என்று சொல்லுங்கள். அங்கிருந்து விரைவில் செய்தி அனுப்புவதாகவும் சொல்லுங்கள். அப்போதுதான் நிம்மதியாக இருப்பார்."

வந்தியத்தேவன் குதிரையைத் திருப்பிவிட்டுக் கொண்டு போனான். விரைவில் இவர்களுடைய பார்வையிலிருந்து அவன் மறைந்தான்.

(தொடரும்...)





# சிறுவர் அரங்கம்

## வல்லவர் யார்?

கல்லில் சிலை வடிக்கும் சிற்பி ஒருவன் ஒரு தேவதையின் சிலையை வடித்துக் கொண்டிருந்தான். அற்புதமாக தத்ரூபமாகத் தோற்றமளித்த அந்தச் சிலை வடித்து முடித்த கணம் ஒரு மின்னல் நேரத்தில் உயிர்பெற்றது. தேவதை மகிழ்ச்சியுடன் சிற்பியின் கலைத் திறனைப் பாராட்டி வேண்டிய வரம் ஒன்று கேட்குமாறு சொன்னது.

சிற்பிக்கு வல்லவர்களுக்கு வல்லவனாக வேண்டும் என்ற வெகு நாள் ஆசை. அவன் அதை தேவதையிடம் சொன்னான். தேவதை அன்புடன் சிரித்துக் கொண்டே "சிற்பியே! நன்கு சிந்தித்துத்தான் கேட்கிறாயா?" என்று கேட்டது. சிற்பி மிகுந்த ஆவலுடன் "ஆம்!" என்றான்.

தேவதை "சரி! அடுத்த இரண்டு நாட்களுக்கு நீ யாரை அல்லது எதை வல்லவன் என்று நினைக்கிறாயோ அதுவாகவே மாறி விடுவாய்" என்று வரம் அளித்து விட்டு அதே மின்னல் வேகத்தில் மறுபடியும் சிலை வடிவிற்குப் போய்விட்டது,

சிற்பி திடீரென்று நிகழ்ந்த இந்த நிகழ்வைப் பற்றி நம்புவதா வேண்டாமா என்று தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டே தன் வேலையைத் தொடர்ந்தான்.

சூரியன் உச்சிக்கு வந்து தகித்துக் கொண்டிருந்தது. சிலை வடிக்கும் கருங்கற்பாறை கொதித்தது. கல்லைக் கொத்தும் உளி கொதித்தது. சிற்பியின் உடலெல்லாம் வியர்த்து வழிந்தது. சிற்பி "இந்த சூரியன் மிகச் சக்தி படைத்தவனாக இருக்கிறானே. எல்லாவற்றையும் ஆட்டிப் படைக்கிறானே! இவன் தான் மிக வல்லவனாக இருக்க வேண்டும்" என்று நினைத்தான். என்ன ஆச்சரியம்! உடனே அவன் தேவதை கொடுத்த வரத்தின் சக்தியால் சூரியனாகவே மாறிவிட்டான்.

சிறிது நேரம் உலகைச் சுற்றி வந்து தனது சக்தியால் ஆனந்தமாக கண்ணில் பட்ட எல்லாவற்றையும் தகிக்கச் செய்து மகிழ்ந்து கொண்டிருந்தான்.

ஒரு இடத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன. அவை சூரியனின் கதிர்களை மறைத்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அன்புள்ளம் கொண்ட, இனிய மற்றும் ஒத்துழைப்பு கொடுப்பவர்களின் துணை விலைமதிப்பற்றது. ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முருகனின் படத்தை விளம்பரமாக்காதீர்கள்

நல்லூர் மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவில் வழமையைவிட, இம்முறை அதிகளவில் பக்தர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிலும் குறிப்பாக, புலம்பெயர் உறவுகள் அதிகளவில் வரக்கூடியதான சூழல் காணப்படுகிறது.

எனவே அதற்கேற்ற ஏற்பாடுகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்வார்கள் என நம்பலாம்.

இருந்தும் நல்லூர் ஆலய சூழலில் நெருக்கடி ஏற்படக்கூடிய இடங்களில் வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கும் பொருள் விற்பனையிலும் விளம்பர சேவையிலும் ஈடுபடுகின்ற வாகனங்கள் தரித்து நிற்பதற்கும் அனுமதி வழங்காமல், அவற்றுக்கு இதர இடங்களை ஒதுக்குகின்ற பணிகளை யாழ்ப்பாண மாநகர சபை மேற்கொள்ள வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

இஃது ஒருபுறமிருக்க, நல்லூர் மகோற்சவ காலத்தில் திருவிழாவுக்கு வருகின்ற பக்தர்களை மையப்படுத்திய விளம்பர நடவடிக்கைகள் தாராளமாக இடம்பெறுவது தெரிந்ததே.

இதில் கந்தப் பெருமானின் உருவப்படத்தைப் பொறித்து, அதனூடு விளம்பரம் செய்கின்ற ஒரு நடைமுறை உண்டு.

இங்குதான் மனவேதனைக்குரிய சம்பவங்கள் நடந்தாகின்றன.

ஆம், நல்லூர்த் திருவிழாவுக்குச் செல்கின்றவர்களிடம் முருகனின் படம் பொறித்த துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளம்பரத் தாள்கள் என்பன விநியோகிக்கப்படுகின்றன.

எனினும் ஒரு சிலர் அந்த விளம்பரத் தாள்களை வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றனராயினும் ஏனையவர்கள் அவற்றை நிலத்தில் வீழ்த்திவிட, அந்த தெய்வீகமான உருவப்படங்கள் காலில் மிதிபடுகின்ற மிகத் துன்பகரமான சம்பவங்கள் சர்வசாதாரணமாக நடந்தாகின்றன.

ஒருபுறத்தில் முருகா... முருகா... என்ற நாமத்தோடு பக்தர்கள் நல்லூர்க் கந்தனிடம் செல்கின்றனர்.

அதேநேரம் முருகனின் திருவுருவப்படம் பொறித்த துண்டுப் பிரசுரங்கள் நிலத்தில் கிடந்து அடியவர்களின் காலில் மிதிபடுகின்றது. இதைப் பார்க்கும்போது மனம் வெந்து போகிறது.

எனவே இந்த ஆண்டிலிருந்து நல்லூர் ஆலய சூழலில் முருகப்பெருமானின் படம் பொறித்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பதை யாழ்ப்பாண மாநகர சபை தடை செய்ய வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து, கடவுள் படங்களைக் காலால் மிதிக்கின்ற மாபாவச் செயல் எம்மை அறியாமலே நடந்தாகும்.

ஆகையால் கடவுள் படம் பொறித்த விளம்பரத் துண்டுப்பிரசுரங்களை யாழ்.மாநகர சபை தடுத்தாக வேண்டும்.

## பொதுச் சேவைக் கட்டமைப்புகள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட வேண்டும்

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

பொதுச்சேவை செயற்பாடுகள் டிஜிட்டல் மயமாக்கப்படல் வேண்டும்.

இணையத்தளமூடாக் வியாபாரப் பதிவுகளை ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ்தெரிவித்துள்ளார்.

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மற்றும் ஆளுநர் ஆகியோரின் தலைமையில், ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இதில்வடக்குமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எம்.பிரதீபன், ஆளுநரின் உதவிச் செயலாளர், சமுர்த்தி ஆணையாளர் நாயகம் மற்றும் யாழ் மாவட்டத்தில் சேவையாற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கான வியாபார பதிவுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கால தாமதமின்றி வியாபார பதிவுகளை முன்னெடுப்பதற்கு இணையதள பதிவு முறையை அறிமுகப்படுத்துவது சிறந்த செயற்பாடு என தெரிவித்த ஆளுநர் வடக்கு மாகாணத்தில் அதற்கான செயற்பாட்டை துரித கதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் கூறினார். அத்துடன் பொதுச் சேவைக்கான செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதும் அவசியம் என தெரிவித்தார்,

மேலும்,விசேட தேவையுடையோர் பொதுச் சேவைகளை இலகுவில் அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்கள் அமைக்கப்படுதல் வேண்டும் எனவும், அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்தார். (ம-7)

## ஐ.தே.கவின் கொள்கைகளை நாம் நிச்சயம் தோற்கடிப்போம்

### நாமல் எம்.பி சூளுரை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டுடன், ஜனாதிபதித் தேர்தலில் தொடர்ந்தும் செயற்படுவோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து, ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதித் தேர்தலின்போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளை தோற்கடிக்க நாம் செயற்படுவோம். தேசிய வேலைத் திட்டமொன்றுடன் பயணித்த தலைவர்தான் ஜனாதிபதியாக இவ்வளவு காலத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

ஆனால், அவர்களில் சிலர் நேற்று இரவும் எமது வீடுகளுக்கு வந்தார்கள். சிலர் காலையிலும் வந்தார்கள்.

இவர்கள் எல்லாம் குழப்பமானதொரு மன நிலையில்தான் தற்போதும் உள்ளார்கள். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது ஒன்றும் புதிது கிடையாது. மொட்டுக் கட்சியின் வேட்பாளர் தொடர்பாக நாம் இன்னும் கலந்துரையாட வேண்டியுள்ளது.

நாம் நபரை இலக்கு வைத்து அரசியல் செய்யப்போவதில்லை. எமக்கு அரசியல் கொள்கைகளே முக்கியமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறார் என்று குற்றச்சாட்டுக்கள் வந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், அவர் சிரேஷ்ட அரசியல்தலைவர் என்றவகையில், நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவார் என்றே நம்புகிறோம் என்றார். (ம-7)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய நால்வர் கைது

(தர்மபுரி)

தர்மபுரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர்பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் அனுமதிக் கப்படாத வேறு பகுதியில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இரண்டு உழவு இயந்திரங்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு புளியம்பக் கடை கலவெட்டி திடல் பகுதியில் ஜேசிபி இயந்திரம் மூலம் அனுமதி இன்றி மண் ஏற்றிய குற்றச்சாட்டில் ஜேசிபி இயந்திரமும் மற்றும் டிப்பர் வாகனமும் பொலிஸரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் அனைவரும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளதுடன் தடயப் பொருட்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரிப் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி தெரிவித்துள்ளார். (ம-7,316)

## 60 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல்

### பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிரடி

(வவுனியா)

வவுனியாவில் 60 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இம் மாதம் 1 ஆம் திகதி முதல் வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது சரியான தராசை பயன்படுத்தாமை, விற்பனைக்கு பொருளை மறுத்தமை, விலை அழிக்கப்பட்டிருந்தமை, விலை குறிக்கப்படாமை, காலாவதியான பொருள்களை வைத்திருந்தமை, தகவல் குறிக்கப்படாமை, உத்தரவாதம்வழங்காமை போன்றன தொடர்பில் 54 வழக்குகளும், பேக்கரி தொடர்பில் 6 வழக்குகளுமாக 60 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகரம், கோவில்குளம், வைரவ புளியங்குளம், குருமன் காடு, பட்டானிச்சூர், வேப்பங்குளம், நெளுக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே 60 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

## ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்

### பாதுகாப்பு செயலாளர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை பத்திரத்துக்கமைய பாதுகாப்பு பதவி நிலைபிரதானியின்தலைமையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனி வக்ர பெயர்ச்சி ராசிபலன்கள்! (29.06.2024-15.11.2024)

## துலாம்

பூர்வ புண்ணிய பலன்கள் அதிகரிக்கும் காலம் இது. பொருளாதாரம் சிறப்பாகக் காணப்படும். புதிய கடன் முயற்சிகள் வெற்றியாகும். பழைய கடன்களை அடைக்கவும் வாய்ப்புப் பிறக்கும். அலுவலகத்தில் நல்ல மாற்றங்கள் உண்டாகும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. குடும்பத்தில் நிம்மதியும் சந்தோஷமும் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். குறிப்பாக சுவாதி நட்சத்திரக்காரர்களுக்கு மிகுந்த நற்பலன்கள் உண்டாகும்.

சித்திரை நட்சத்திரக்காரர்களுக்கு இதுவரை ஏற்பட்ட நஷ்டங்களில் இருந்து வெளிவரும் அளவுக்குப் பணவரவு உண்டாகும். பிள்ளைகள் வகையில் அனுகூலம் கிடைக்கும். பிள்ளைகளுக்குத் திருமணம் குழந்தைப்பேறு போன்ற சுபநிகழ்வுகள் உண்டாகும். என்றாலும் சிந்தித்துச் செயற்பட வேண்டியது அவசியம். புதிய நண்பர்களை நம்பிப் புதிய முயற்சிகளில் இறங்கவேண்டாம். ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். சிலருக்கு அலர்ஜி தொடர்பான வியாதிகள் வந்து விலகும்.

**பரிகாரம்**

வியாழக்கிழமைகளில் ஆஞ்சநேயரை வழிபட்டு வர கஷ்டங்கள் குறைந்து நன்மைகள் அதிகரிக்கும்.

## விருச்சிகம்

கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்சினைகள் தீரும் காலமாக இந்த சனி வக்கிர சஞ்சார காலகட்டம் அமைகிறது. பொருளாதாரம் மேம்படும். இழுபறியாக இருந்த விசா பிரச்சினை முடிவுக்கு வந்து வெளிநாடு செல்லும் யோகம் வாய்க்கும். தடைபட்டு வந்த விடயங்கள் முடிவுக்கு வரும். மனதில் தைரியம் குடிகொள்ளும். குடும்பத்தில் அமைதி திரும்பும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து மோதல்கள் விலகி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

இதுவரை கண்டும் காணாமல் இருந்த உறவினர்கள் தேடிவந்து பேசுவார்கள். கடன் பிரச்சினை கட்டுக்குள் இருக்கும். வீடு மனை வாங்க வங்கிக் கடன் உதவி கிடைக்கும். அலுவலகத்தில் உங்களின் பேச்சுக்கு மரியாதை கிடைக்கும். சிலருக்குப் புதிய வேலை கிடைக்கவும் வாய்ப்புண்டு. வியாபாரத்தில் போட்டிகள் குறையும். முரண்டு பிடித்த பங்குதாரர்கள் இனி ஒத்துழைப்பு தருவார்கள். தொழிலை விரிவாக்கவும் வாய்ப்புகள் தேடிவரும்.

**பரிகாரம்**

வியாழக்கிழமைகளில் ஆஞ்சநேயரை வழிபடுவது நல்லது. கருட பகவானுக்கு தீப மேற்றி வழிபட தடைகள் விலகி நன்மைகள் கைகூடும்.

## தனுசு

சனிபகவான் பூரட்டாதி நட்சத்திரத்திலிருந்து சதய நட்சத்திரம் வரை சஞ்சாரம் செய்யும் இந்தக் காலகட்டம், பல பிரச்சினைகளால் தடுமாறிக்கொண்டிருக்கும் தனுசு ராசிக்காரர்களுக்கு ஆசுவாசம் தரும் காலகட்டமாக அமையும். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். தாயாரின் ஆரோக்கியம் மேம்படும். குடும்பத்தில் இருந்த மருத்துவச் செலவுகள் குறையும்.

மூலம், பூராடம் நட்சத்திரக்காரர்களுக்குக் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்புண்டு. கணவன் மனைவிக்கிடையே இருந்த பிரச்சினைகள் குறைந்து ஒற்றுமை ஏற்படும். என்றாலும் வீண் பிரச்சினைகளைப் பேசி விவாதம் செய்ய வேண்டாம். வேலையில்லாதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வேலையில் இருப்ப வர்களுக்கு பணியிடத்தில் நல்ல மாற்றங்கள் நிகழும். வியாபாரத்திலும் போட்டிகள் குறைந்து ஓரளவு லாபம் கிடைக்கும். புதிய வியாபாரங்கள் தொடங்க இது ஏற்ற காலம் அல்ல. எனவே முதலீடுகளில் கவனம் தேவை.

**பரிகாரம்**

சனிக்கிழமைகளில் அருகில் இருக்கும் வெங்கடேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்று தீபம் ஏற்றி வாருங்கள். சங்கடங்கள் தீர்ந்து நன்மைகள் நடைபெறும்.

## மகரம்

அலைச்சல்கள் அதிகரிக்கும் காலமிது. சிலருக்கு நீண்ட தூரப் பயணங்களும் அதனால் செலவுகளும் அதிகரிக்கும். இருந்தாலும் போதுமான பணவரவு காணப்படுவதால் பிரச்சினை இல்லை. சேமிக்கத் தொடங்குவீர்கள். வேலையில் நல்ல மாற்றங்கள் இருக்கும். அரசுப்பணியில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் கிடைக்க வாய்ப்புண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு இப்போதைக்கு இல்லை என்றாலும் சின்னச் சின்ன சலுகைகள் கிடைக்கும்.

வழக்குகள் சாதகமாகும். பலநாள் போராட்டங்கள் முடிவுக்கு வரும். குடும்பத்தில் அமைதி நிலவும், கணவன் மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துமோதல்கள் விலகும். பிரிந்திருந்த தம்பதி ஒன்றுசேரவாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளின் ஆரோக்கியம் மேம்படும். அவர்களின் கல்வியில் மேன்மை உண்டாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகளும் வசூலாகும். கடையை விரிவுபடுத்தத் திட்டமிடுவீர்கள்.

**பரிகாரம்**

திருவோண நட்சத்திர நாளில் பெருமாளுக்கு அர்ச்சனை செய்து, துளசி மாலை சாத்தி வழிபட சந்தோஷம் அதிகரிக்கும்.

## கும்பம்

கும்பராசிக்குள்ளேயே சனிபகவான் வக்ரம் அடைவதால் எதிலும் நிதானம் தேவை. குறிப்பாக சதய நட்சத்திரக்காரர்கள் தங்கள் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது. பணவரவு தாமதமாகும். கேட்டுருந்த கடன் தொகை கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்படும். தேவையற்ற விவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது.

வழக்குகளில் இழுபறியே காணப்படும். எனவே வழக்கறிஞரை மாற்றும் முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. முக்கியப் பிரச்சினைகளைக் கையாளும்போது நிதானம் அவசியம். குடும்பத்தில் விவாதங்களை முற்றிலும் தவிர்ப்பது நல்லது. வரும் பணத்தை சேமிக்கப் பாருங்கள். செலவுகளில் சிக்கனம் தேவை. பெரிய நோய் இருப்பது போன்ற பிரம்மை ஏற்படும். எனவே உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள். ஆலய வழிபாடு, யோகா, தியானம் போன்றவற்றில் ஈடுபடுங்கள். குறுக்குவழிகளை முற்றிலும் தவிர்த்து விடுவது நல்லது.

**பரிகாரம்**

செவ்வாய்க்கிழமைகளில் முருகப்பெருமானை விரதம் இருந்து வழிபாடு செய்துவந்தால் சிரமங்கள் குறையும். கந்த சஷ்டிக் கவசம் பாராயணம் செய்வதும் நல்லது.

## மீனம்

சனி வக்கிர சஞ்சார காலகட்டத்தில் மீன ராசிக்காரர்களுக்கு விரயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே அவற்றை நிலம் வாங்குவது, வீடு கட்டுவது போன்ற சுபவிரைய காலமாக மாற்றிக் கொள்ளலாம். வண்டி வாங்குவது மாற்றுவதற்கு உகந்த காலம் இது. பணவரவு திருப்தியாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரும்.

பிள்ளைகளால் நல்ல பலன்கள் உண்டாகும். மகனுக்கு நல்ல வேலை அமையும். மகளின் திருமண முயற்சிகள் வெற்றியாகும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களை விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. புதிய வியாபார முயற்சிகளை தற்போதைக்கு ஒத்தி வைக்கலாம். அலுவலகத்தில் மரியாதை கூடும். எதிர்த்தவர்கள் அடங்கிப்போவார்கள். என்றாலும் அதிகாரிகளோடு மோதல் போக்கைக் கைவிடுவது நல்லது. வழக்குகளில் மிதமான போக்கையே கடைப்பிடித்து வாருங்கள்.

**பரிகாரம்**

வெள்ளிக்கிழமைகளில் துர்கையை வழிபட்டு வர, பிரச்சினைகள் குறைந்து சுபபலன்கள் அதிகரிக்கும்.

# தென்னகோனுக்கு ஆதரவாக தேரர் குழுவொன்று பேரணி

(கொழும்பு)

தேசபந்து தென்னகோனை மீண்டும் பொலிஸ் மா அதிபர் பதவியில் அமர்த்துமாறு கோரி அகலகட சிறிசுமண தேரர் முக்கியஸ்தர்கள் குழுவொன்று கொழும்பில் நேற்று பேரணியில் ஈடுபட்டனர்.

அதன்படி கோட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் ஆரம்பமாகி கோட்டை போதி வரை சென்றதுடன் இந்த பாதயாத்திரையில் வெளிநாட்டு தேரர்களும் கலந்துகொண்டனர்.

இந்தக் குழுவினர் போதி கோட்டைக்கு அருகில் சென்று சமயச் சடங்குகளை நடத்தியதுடன், பொலிஸ் மா அதிபருக்கு அவர் பதவிக்காலத்தில் பணியாற்றுவதற்கு உச்ச நீதிமன்றம் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தனர்.



அத்துடன் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்புக்காக பொலிஸ் மா அதிபரினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு எதிராக தற்போது பல்வேறு தடைகள் விதிக்கப்படுவதாக அங்கு கூடியிருந்த தலைவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

மேலும் தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராகப் பணியாற்றுவதைத் தடுத்து, உயர் நீதிமன்றம் ஜூலை 24 அன்று இடைக்காலத் தடை விதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அராலியில்...

அவரது மனைவி நேற்றுக் காலை வெளியே சென்றிருந்தவேளை முதிய வர் தூக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசா ரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலைக்கு கொண்டு செல்லப்பட் டுள்ளது. (ம-7)

## ஊர்காவற்றுறை...

விசாரணை நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னி லையில் இடம்பெற்றது.

இவர்களில் ஜூன் 16 மற்றும் 22 ஆம் திகதிகளில் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்ட 26 மீனவர்களில் 23 பேர் விடு தலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர், இரண்டாவது தடவையாகவும் கைது செய்யப்பட் டுள்ளதால் அவர்களுக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதித்து நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் விடுவிக்கப்பட்ட 23 பேரில் மூவர் படகு உரிமையாளர்கள் என்பதுடன், அவர்களுக்கு தலா 4 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

அபராதம் செலுத்தத் தவறும் பட்சத் தில், 6 மாத சிறைத் தண்டனை விதிக் கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் கைப்பற்றப்பட்ட 3 படகு களும் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

இதனைத் தவிர, கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்ட 25 மீனவர் களின் விளக்கமறியல் எதிர்வரும் 6ஆம் திகதி வரையும் கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட 13 மீனவர் களின் விளக்கமறியல் எதிர்வரும் 8ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட் டுள்ளது. (ம-7)

## வவுனிக்குளத்தில்...

புரம் மல்லாவிப் பகுதியினைச் சேர்ந்த ஆனந்தராசா சஜீவன் (வயது-27) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 20 இலட்சம் பணத்தினை கொண்டு யோகபுரத்தில் இருந்து பாண்டியன் குளத்திற்கு சென்ற இளைஞன் இரவு 8.40 வரை நண்பர்களுடன் தொலை பேசியில் உரையாடியதாகக் கூறப்படு கின்றது.

அதன் பின்னர் அவரது தொலை பேசி வேலை செய்யவில்லை. குறித்த இளைஞனின் தொடர்பு கிடைக்காத நிலையில் அவனது நண்பர்கள் தேடிய போது நேற்று அதிகாலை பாண்டியன் குளம் குளக்கரையில் மோட்டார் சைக் கிள் இனம் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனிக்குளத்தின் மூன்றாது நீர் சுருங்கையில் (நீர் கொட்டு) பகுதியில் சடலம் கிடப்பதை இனம் காணப்பட்டு பிரதேசவாசிகளால் சட லம் மீட்கப்பட்டு வெளியில் எடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர். (ம-7,100)

## ஒக்ரோபர்...

கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கை விரைந்து முடிவுறுத்துவதற்கு வசதி யாக மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், சண்முகம் குகதாசன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகிய 4 எதிராளிகள் நேற்று தமது பதில் மனுக் களைத் தாக்கல் செய்தனர்.

ஏனைய நான்கு எதிராளிகளான எம்.ஏ.சுமந்திரன், குலநாயகம், ப.சத் தியலிங்கம், இரத்தினவடிவேல் ஆகி யோர் சார்பிலான பதில் மனுக்கள் ஏற் கெனவே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.(ம-7)

## கொழும்பிலிரு...

வித்தனர்.

நொச்சியாகமப் பகுதியில் உந்துருளி மீது சொகுசு பேருந்து மோதியதுடன், அதில் பயணித்த கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் விபத்திற் குள்ளாகினர்.

உந்துருளியின் பின்னால் இருந்த பெண், பேருந்தின் சில்லுகளில் நசுங் கிய நிலையில் தலை துண்டிக்கப்பட்ட தால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

குறித்த பெண் தனது கணவருடன் உந்துருளியில் நொச்சியாகம நகரை நோக்கிப் பயணித்தபோது விபத்துக் குள்ளானதாகவும், விபத்தில் கண வருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய் யப்பட்டுள்ள சாரதி நொச்சியாகம நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## ஜனாதிபதிக்கு...

நடைமுறைப்படுத்தல், கடமை களை முன்னெடுத்தல் ஆகியன தடுக்கப் பட்டுள்ளன. (ம-7)

## கற்கள், தடி...

தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஹொருகொடவத்த பகுதியைச் சேர்ந்த நான்கு பேருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு, ஹொருகொட வத்த சாந்தவத்த பகுதியில் நபர் ஒருவரை அடித் துக் கொலைசெய்த தாக 6 பிரதிவாதி களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

எனினும் வழக் கின் 2ஆவது பிரதிவாதி விசா ரணையின் போது மரணமடைந்த நிலையில், போதிய ஆதா ரங்கள் இல்லாத தால் 6 ஆவது பிரதிவாதி விடு விக்கப்பட்டுள் ளார்.

2017ஆம் ஆண்டு சட்டமா அதிபர் பிரதி வாதிகளுக்கு எதி ராக 4 குற்றச்சாட் டுக்களின் கீழ் குற் றப் பத்திரிகை தாக்கல் செய்துள் ளார்.

இந்த உத்தர வைப் பிறப்பித்த நீதிபதி, குற்றம் சாட்டப்பட்டவர் கள் மீதான குற் றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரு பிக்கப்பட்டுள்ள தால் குற்றம்சாட் டப்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப் பளித்துள்ளார். (ம-7)

## அபி...

எவ்வாறாயினும் தற்போது முன் னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி மற்றும் நிவாரண வேலைத்திட்டங் களில் அரசியல் தலையீடுகளை தவிர்க்குமாறே உயர்நீதிமன்றிடம் தங் களால் கோரப்பட்டுள்ளதாக பெஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த வேலைத்திட் டங்களை முன்னெடுக்கும்போது, தேர் தல்கள் ஆணைக்குழுவின் ஆலோச னைகள் பின்பற்றப்பட வேண்டும் என வும் கோரியுள்ளதாக பெஃப்ரல் அமைப்பு குறித்த அறிக்கையில் தெரிவித்துள் ளது. (ம-7)

## இடமாற்றங்...

இடமாற்ற சுற்றறிக்கை ஒருங்கிணைக் கப்பட்ட சேவைகள் பணிப்பாளர் நாய கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர் தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுக்களை விநியோகிப்பதற்காக 8,000 அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கு பிரதி தபால்மா அதிபர் தீர்மானித்துள்ளார்.

மேலும் உத்தியோகபூர்வ தபால் மூல வாக்குகள் மற்றும் விசேட கடி தங்களை விரைவாக விநியோகிப்பதற் கான விசேட வேலைத்திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.07.30
சீட்டிழுப்பு இலக்கம் 5550
C 0 1 0 2 6 2
விசேட அத சம்பத
C 0 2 6 2
ரூ. 1,000,000/- 273879
ரூ. 500,000/- 368895
ரூ. 500/- 601
469088
சீட்டிழுப்பு இலக்கம் 125

தன நிதானய
திகதி - 2024.07.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1580
N 12 32 72 77 N
63923

மெகா பவர்
திகதி 30/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1898
P 22 45 54 62 64
59686

லக்கி 7 VIP
திகதி 2024.07.30
சீட்டிழுப்பு இலக்கம் 0376
T 0 8 0 6 7 6 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3792
சீட்டிழுப்பு திகதி 30.07.2024
G 03 10 42 45
G 68986

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.30
சீட்டிழுப்பு இலக்கம் 0859
துலாம் 15 23 27 31 துலாம்
07881
10

உத்தியோகபூர்வ முடிவுகள்
30.07.2024 வெற்றி வாரம் 258 வர்ணம் சிவப்பு
R 0 8 9 9 0 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,628,168.00
32212

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2524 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 30.07.2024 தினம் செவ்வாய்
06 32 36 51 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 101,750,443.20

சனிதா
திகதி 2024.07.30 வெற்றி வாரம் 4685 வர்ணம் பச்சை
16 17 58 72 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,830,801.60
36262

சசிரி
509
2024.07.30
27 38 44
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,730,000/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4236 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.07.30 தினம் செவ்வாய்க்கிழமை
05 23 26 49 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,471,636.80
410816

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 12 10 11 29 45
1700
30.07.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 536,103,420.20

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2350
சீட்டிழுப்பு திகதி : 2024.07.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,678,740.00
01 15 67 72 I
596333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0890)

076 825 7716 (ஆகாஸ்)



**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்பு : 075 033 6759


# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே ஆதரவு

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பொருளாதாரம் நமது முதன்மையான முன்னுரிமை. 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் செய்தது போல் பொருளாதாரம் தோல்வியடைந்தால் அனைத்தும் எவ்வாறு சரிந்துவிடும் என்பதை நாங்கள் பார்த்தோம். ஜனாதிபதி அதை மீட்பதிலும் நிலைப்படுத்துவதிலும் சிறப்பான பணியை செய்துள்ளார்.

தற்போதைய திட்டம் செயல்படும் போது நாம் புதிய விடயங்களை முயற்சி செய்ய முடியாது. நமது வெற்றிகரமான கொள்கைகளை கடைப்பிடிப்பது நமது நாட்டின் எதிர்காலத்திற்கு இன்றியமையாதது.

எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு முழுமையாக ஆதரவளிக்கிறேன் என அவர் குறித்த பதிவில் தெரிவித்துள்ளார். (ம-7)


அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0889)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241



**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.

(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

(C-0889)

CIMS College
49A, Chapel Street,Jaffna.

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322


# கத்தியால் வெட்டியதில் இளைஞன் படுகாயம்

## பருத்தித்துறையில் சம்பவம்

பருத்தித்துறை சந்தை மேற்கு ஒழுங்கையில் இடம்பெற்ற கத்தி வெட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை (30) மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சீனிவாசன் கிருபாகரன் (வயது-26) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)


**வாடகைக்கு உண்டு**

யாழ். ஸ்ரான்லி வீதியில் 1ம், 2ம் மாடிகள் (2000 சதுர அடிகள்) சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.

(C-887)

076 315 6470



**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்**

சகல நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு

| | | | |
|---|---|---|---|
| UK | - 1300/= | French | - 1990/= |
| Canada | - 2400/= | Germany | - 1990/= |
| Australia | - 2300/= | USA | - 2400/= |

மற்ற நாடுகளுக்கும் விசேட சலுகை

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna. | 208, Galle Road, colombo-6.

077 755 4528



**கனடாவில் உயர்கல்வி**

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

*IELTS Lifeskills A1 (UK Spouse Visa exam)
*Dutch(டச்) - Netherland/Holand - Classes
*IELTS Academic & General / IELTS UKVI

வகுப்புகள் நடைபெறுகின்றன. (1585)

WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
0779265447 / 0217200989
கிளைகள் –
சாவகச்சேரி/வவுனியா / புதுக்குடியிருப்பு



**Office staff Wanted**

வெளிநாட்டு உயர் கல்வி மற்றும் Skilled Migration Company - World Wide Overseas Australia நிறுவனத்தின், நல்லூர்க் கிளையில் பொறுப்பாளராக கடமையாற்றக்கூடிய பெண் அலுவலர் தேவை.

Computer/IT and English communication skills are needed.

Salary Rs. 50,000/= PM plus Commission for each successful application. Forward your updated CV to info@unicornmigrate.com

(212)

spraj54@gmail.com 077 768 7821



**வங்கி மீதி வசதி (Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 17 37 684



**மணப்பெண் தேவை**

- வடலியடைப்பு - மாவிட்டபுரம், இந்து, கௌரவகுலம், 1990, விசாகம், BSc, MBA Consultant மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 30243
- Jaffna Town - கொக்குவில், இந்து, கௌரவகுலம், 1988, அனுசம், MBBS (Jaffna university), Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 27295
- காரைநகர், இந்து, கௌரவகுலம், 1988, உத்திரட்டாதி, BSc(Hons) மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 43114
- சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம், 1992, பூராடம், BSc Quantity surveying மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 8 இல் செவ்வாய் பதிவெண் - 42500
- அல்வாய், இந்து, கௌரவகுலம், 1990, ரோகினி, Charted Accountant மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 42381
- பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம், 1989, கேட்டை, Phd in Civil Engineering Senior lecturer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 41829
- நயினாதீவு, இந்து, கௌரவகுலம், 1988, உத்திரட்டாதி, MBBS, Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 40669
- காரைநகர், இந்து, கௌரவகுலம், 1993, ஆயிலியம், BA Business Management(uk Degree) மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 31692
- வேலணை, இந்து, கௌரவகுலம், 1991, திருவாதிரை, Bachelor of Information Technology மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 31530

(203)

www.thaalee.com
077 539 3728
077 803 8193



**வேலைவாய்ப்பு**

இலங்கையில் முன்னணியில் இயங்கிவரும் நிறுவனமான EDM இன் 2024 ம் ஆண்டுக்கான வேலைவாய்ப்புக்கள்

- Supervisor
- Assistant Manager
- Manager
- Administration

பதவிகளுக்கேற்ப உங்களுக்கான Salary + Insentive + Bonus மற்றும் ஏனைய வெகுமதிகளும்.

இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். வரையறுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே.

- வயதெல்லை :- 18 - 40+
- கல்வித்தகைமை:- 10, O/L, A/L
- ஆண், பெண் இருபாலரும்
- புதியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(1583)

தொடர்புகளுக்கு:

076 678 3886
077 675 4295
077 282 6570



**Physical and Digital (Zoom) English classes**

30 நாட்களில் ஆங்கிலம் கற்போம் - Adult only
(இலகுவான தமிழ்மொழி மூலம்)

1. Grade 1 - A/L (Term Exams நடத்தப்படும்)
2. Grammar and Spoken English
3. Elocution Classes Beginner - Grade 8

Course இல் இணைவதற்கு இப்போதே தொடர்பு கொள்ளவும்.

(197)

NALTC
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584



**Visitor Visa/Tourist Visa/Student Visa/Settlement Visa**

UK, Canada, USA, Norway, France, Australia மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் Online மூலம் செய்து தரப்படும். மேலும்

- Online Police Clearance
- Online booking an appointment
- விசா தொடர்பான ஆலோசனைகள் மற்றும் கடிதங்கள்

A/L படித்த பெண் பணியாளர்கள் தேவை.
Salary - 35000.00

(197)

Online Visa Advisor
Jaffna, Mannar, Colombo
070 375 0002



**V2 VISA SERVICES**
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0889)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org